தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உய்யன நவ, ஆவணி (1976 — ஆகஸ்ட்டு — செப்டம்பர்)	மலர்
ருய		ரு

வானொலிப் பேச்சு :

காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ்

நெல்லை. நா சொக்கலிங்கம், எம். ஏ.,
ம. தி தா இந்துக் கல்லூரி.

தென்பாண்டி வளநாட்டின் சீர்துலக்கும் திருநெல்வேலிப் பதியில் பகுதியாக விளங்கும் தச்சனல்லூரில் 1836-இல் தோன்றிய அழியாப் புகழ் பெற்ற அழகிய சொக்கநாத பிள்ளை இயற்றியதே, காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ் நூல் 'பிள்ளைத் தமிழ்' என்பது தான் போற்ற வந்த பாட்டுடைத் தலைவனையோ தலைவியையோ சிறு குழந்தையாக்கிப் பருவங்களுக்குப் பத்துப் பத்துப்பாடல்களாகப் பத்துப் பருவங்களாகப் பகுத்துப் பாடுவ தாகும். குழந்தையின் மூன்றும் திங்கள் தொட்டு இருபத்தொன்றும் திங்கள் வரை காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில சிறுபறை சிறுதேர் என வகுத்துப் பாடப் பெறுவது ஆண்பாற் பிள்ளைத் தமிழாகும். இறுதியில் உள்ள மூன்றினுக்குப் பதிலாக அம்மானை, நீராடல், ஊசல் என அமைத்துப் பாடப்பெறுவது பெண்பாற் பிள்ளைத் தமிழாகும் அருந்தமிழ் விருந்தாக விருத்தப்பா யாப்பில் அமைத்தும் இவற்றின் இலக்கணத்தை எடுத்துரைக்கும் பாட்டியல் நூல்கள், 96 வகைச் சிற்றிலக்கிய வகையுள் ஒன்றாக்கிக் கூறும். இதனைப் 'பிள்ளைப் பாட்டு', 'பிள்ளைக்கவி' எனவும் பெயரிட்டு அழைப்பர்

பாட்டுடைத் தலைவி :

"குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்"

மயக்குகின்ற மக்களைப் பற்றிப் பாடிய பாண்டிய மன்னன் அறிவுடை நம்பி முதல் அருந்தமிழ்ப் புலவரும் அடியவருமாய்த் திகழ்ந்த பெரியாழ்வார் வரையிலும் மழலையின் எழிலைத் தனிப் படவே பாடி வந்துள்ளனர். பெரியாழ்வாரால் வித்திடப்பெற்ற பிள்ளைத் தமிழ், ஓட்டக் கூத்தரால் முழு உருவம் கொடுக்கப் பெற்று வளர்க்கப் பெற்றதெனலாம் இவ்வாறு பெருகி வளர்ந்து வந்துள்ள பிள்ளைத் தமிழ் இலக்கிய வகையினைத் தெரிவு செய்து, நெல்லை நகரில் எல்லையிலாப் புகழுடன் கருணை மழை பொழியும் வடிவுடை நாயகியை — காந்திமதித் தாயைப் பாட்டுடைத் தலைவி யாக்கிப் பாடி மகிழ்கின்றார் அழகிய சொக்கநாதர்.

பிள்ளைத் தமிழா? பெரிய தமிழா?

இது பிள்ளைத் தமிழா? இல்லை! 'பெரிய தமிழாகும் என்கிறார் சேற்றூர் அருணாசலக் கவிராயர், இதோ அவருடைய பாராட்டு மொழி:

'சீர்பூத்த நெல்வேலிக் காந்திமதித் தாய்பருவந்
தேர்ந்து தேர்ந்து
நார்பூத்த பாமாலை புனையு மழகிய சொக்கநாத
னென்னும்
பேர்பூத்த நாவலன்பிள் ளைத்தமிழென் றுலகறியப்
பேரிட்டாலும்
ஏர்பூத்த அப்பாடற்பொருள் பெரியதமிழெனப்
பேரிசைக்குமன்றே!

காந்திமதியம்மையின் கனிவைப் பேசும் இந்நூலின் புலமை வளத்தையும் புதுமைச் சுவையினையும் இனிது கேட்டு உவந்த வள்ளல் முத்துசுவாமிப் பிள்ளை. அழகிய சொக்கநாதருக்குப் பொன்னாடை அணிவித்து மணிதிகழ் வைரக் கடுக்கண்களையும் அணிவித்துச் சிறப்பித்தாராம். அம்மட்டோ! சடையப்பரைப் போல் திகழ்ந்த வள்ளலின் மேல், 'முத்துசுவாமிப் பிள்ளை காதல் பிரபந்தம்' பாடிப் பாமாலை சூட்டினார் அழகிய சொக்கநாதர்.

அழகிய சொக்கநாதரின் அருமை வாழ்வு:

ஏட்டுக் கல்வி பயின்ற இவர், நாட்டும் சீர்க்கல்வி பயிற்றும் ஆசிரியராகவும் வீற்றிருந்து புகழ் ஈட்டியவர். ஏடுகளைப் படி எடுக்கும் இனிய பணியை ஏற்றுச் செயற்பட்டவர். அம்மை

யைப் பற்றிச் சொல்லோவியம் தீட்டிய இவரை, அம்மையின் திருவுருவையும் வண்ண ஓவியத்திலும் தீட்டிய திறமுடைய வராய்த் திகழ்ந்தார் என்கிறார் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார், 'தன் வருமானத்தைப் பற்றிக் கேட்பவரிடம்' அழகிய சொக்கநாதர், "எனக்கு, மாசம்பத்து" என்பாராம். ஆம்! "எனக்கு, மாசம் பத்து" என்றும் பொருள் தருமாறு. இவரே, "பதசாகித்தியம், சிங்காரபதம். காந்திமதியம்மை பதிகம், காந்திமதியம்மை கலித்துறை அந்தாதி, சங்கரநயினார் கோவில் கோமதி அந்தாதி, தாணுமால் பதிகம் ஆகிய இன்னபிற நூல் களையும் பாடித் தமிழுக்குப் புதிய அணி சேர்த்துள்ளார். வேம்பத்தூர்ப் பிச்சுவையர், முகவூர் இராமசாமிக் கவிராயர், சின்னிகுளம் அண்ணுமலை ரெட்டியார், முத்துவீரப் புலவர், நெல்லை முத்துப் புலவர், ஆகிய பலர் இவர் காலத்து வாழ்ந்த இனிய தமிழ்ப் புலவர்கள் ஆவர்.

ஆசிரிய விருத்தப்பாவில் ஆற்றொழுக்காக அமைந்து விளங் கும் காந்திமதியம்மை பிள்ளைத் தமிழின் காப்புச் செய்யுளாக அமைவது விநாயகர் வணக்கமாகும். இந்நூலின் அவையடக் கம் முதலியவற்றையும் சேர்த்து நூற்றுநான்கு பாடல்கள் உள்ளன, இப்பாடல்கள் எல்லாம் தமிழ் இலக்கிய மரபை அடிப்படையாகக் கொண்டு இயற்றப் பெற்றவை. அம்மையைக் குழந்தையாக்கிப் பாடும்போதும், அம்மையின் இறைமைத் தன்மையையும் இழையோட விட்டிருக்கின்றார் ஆசிரியர்.

தமிழின் பெருமை கூறல்

தழைத்தோங்கிவரும் தமிழைப்பற்றி ஆசிரியர், "தெய்வதச் செந்தமிழ்; பண்முத்தமிழ், மலையத்தமிழ், வண்தமிழ். இன்பத் தமிழ், செப்பரும் முத்தமிழ் ஆய்ந்ததமிழ்" எனவெல்லாம் சொல்லாரம் தொடுத்துச் சூட்டி மகிழ்கின்றார் நெல்லை மாநகரின் எழிலையும் ஏற்றத்தினையும் பல இடங்களில் படம் பிடித்துக் காட்டுகின்றார் 'திங்கள் விழா மல்கு திருநெல் வேலியின்' பெருமையினை.

"தமிழ் கொழிக்கும் கழைவனம்"
"நிறைபுகழ்ப் பாண்டி வளநாடும் அதன்
முகமனைய நெல்லை நகரும்"

என்று திக்கெட்டும் பரவும் வண்ணம் முழக்கம் செய்கின்றார். இத்தகைய சீரும் சிறப்பும் நிறைந்த நெல்லை நகரில் வீற்றிருக்கும் அம்மையின் திருப்பெயர் வடிவுடைநாயகி என்பதாகும். இவ் வன்னையை,

"திருவளரும் நெல்லைநகர் வடிவுடைய காந்திமதி" என்றும்,
"மதில்சூழ் சிகரித் திருநெல்லை வடிவை" என்றும்,
"குன்ருர் நெல்லைப்பதி வடிவே" என்றும்.
"வரைமால் வனத்துத் திருநெல்லை வடிவே" என்றும்,

எழில் ஒழுக ஏற்றமுடன் அழைத்து மகிழ்கின்ருர் அழகிய சொக்கநாதர்.

நெல்லைப் புகழ்!

நெல்லைக்கு, "வேணுவனம் வேய்வனம். அமைவனம்" என்றுள்ள பெயர்களையும் ஆசிரியர் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். இங்குள்ள இறைவன் மூங்கிலில் முளைத்த சிற்றுருக் கொண்ட வேய்முத்தநாதர் ஆவார். இவ்விறைவன் முழுது கண்ட ராம பாண்டியனின் அன்பான வேண்டுகோளுக்கு இணங்க, வளர்ந்தோங்கி நின்ருன் ஆகவே நெல்லையப்பரை, "வேண்ட வளர்ந்த பெருமான்" என்று கூறுவர்? பிள்ளைத் தமிழில். "வேணுவனம் அதனில் வேண்ட வளர்கண்ணுதற் காட்சியார்" என்று பேசுகின்ருர் ஆசிரியர் இப்பெருமானுக்குரிய 'நெல்லை,' திருக்கோயில் அங்ஙனத்தில் உலரப் போட்டுவிட்டுத் திருமஞ்சன நீர் கொண்டுவரத் தண்பொருநை ஆற்றிற்குச் சென்றிருந்தார் அருச்சகர். அவர் திரும்புமுன் பெருமழை பெய்யத் தொடங்கிற்று. மனக்கவலையுற்ற அருச்சகர் விரைந்தோடி வந்தபோது, அங்கே கண்ட காட்சி அவரை மெய்சிலிர்க்க வைத்தது. இறையருளால், நெல்லைச் சுற்றி வேலியாக மழை பெய்ததே ஒழிய, நெல் சிறிதுகூட நனைய வில்லை. ஆகவே இத்திருத்தலம் 'நெல்வேலி' என்று பெயருடையதாயிற்று. இச்செய்தியினைப் பிள்ளைத்தமிழ் ஆசிரியர்,

"அதுலமெய்ச் சிவதபன வேதசன்
மாஎனும் அருச்சகன் வியந்தாட அன்று
அளவறு மழைப்புனலில் நெல்லுக்கு
வேலியிடும் அனவரத தானா" (94)

எனத் தவருது குறிப்பிடுகின்ருர். நெல்லையில் உள்ளது தாமிர சபை, இதனையும்,

"தாம்பிரத்தால் விதித்த திருமன்றுள்
இறைவர் உடன் ஆடும் மயிலே!"

எனக் கூறி மகிழ்கின்ருர் அழகிய சொக்கநாத பிள்ளை.

நெல்லை வாழ் மக்களின் நெறி நின்ற வாழ்வை வகுத்துக் கூறுமிடத்து, "கொல்லாத விரதர் மிகு நெல்வேலி" என்பார். தண்பொருநை ஆற்றின் அரங்கத்தில் குறுக்குத்துறை உள்ளது. அங்குள்ள குமரகோட்டத்தில் குடிகொண்டுள்ள குமரவேளைக் குறித்து இவர்,

"குலுமா முனிக்கருளும் உருமா மலைக்குமா
குருநா தனைப் பணிகுவாம்" (4) என்கின்றார்.

சந்தங்கமழ் செந்தமிழ்ப் பாடல்களைத் தம் நூலில் பயன் படுத்திக் கற்பார் நெஞ்சத்தைக் கனிந்துருக வைத்திடுவார்.

'பருவதாரி முதல்வினோர்கள் பரவுமேனி புதல்வியே
படியில்வாழும் உயிர்களாய பயிர்கள்நாடும் எழிலியே
இருவர்தேட அரியர்பாகம் இசையுமாசை மனைவியே
இடைவிடாது துதிசெய்வார்தம் இதயமேவு முதல்வியே
அருவவாதர் அறிஒணாத அமலஞான சொரூபியே
அறிவிலாலும் விழிகளாலும் அயில்வதாயின் அமிழ்தமே
மருவலார்முன் வெருளுருத வலிமைஈய வருகவே
வளமைநீடு திருநெல்வேலி வளர்குமாரி
வருகவே!" (58)

என்னும் இந்தப்பா ஒருவகைச் சந்தப்பாவாகும்.

இந்நூலில் சிலேடை அமையுமாறும் பல பாடல்களைப்பாடி அம்மையின் புகழுக்கு அணி சேர்க்கின்றார். அவற்றுள் ஒன் றினைக் கண்டு சுவைப்போம்.

"மணிதேர் சாலிப் புல வரிசை
வளையும்; தழையும் புலவ ரிசை;
மறையோர் அகத்தின் முத்தீயும்;
வளரும் களைகள் முத்தீயும்;

பணிசேர் சினத்து மாதர் அங்கம்
பயிலும் பொய்கை மாதரங்கம்;
படர்வான் மின்னைக் கொடிதிகழும்;
பலவா மணிப்பொற் கொடிதிகழும்;

கணிநீர் கடந்து வாசிக்கும்;
காவிற் கிளிநூல் வாசிக்கும்;
கைம்மா இனங்கள் கன மடுக்கும்;
கவின்கோ புரம்க னமடுக்கும்"

என்னும் அம்மானைப் பருவப் பாடலில் சொல்லணியாகிய 'மடக்கு' அமைந்துள்ளது. முத்தும் செந்நெல்லும் நிறைந்து வளர்ந்து கிடக்கும் வயல்வரிசை அதாவது புல வரிசை; நெல்லில் புலவர்களின் இசை தழைத்து நிற்கும் (புலவர் இசை தழையும்); மறையோதும் அந்தணர்தம் இல்லங்களில் 'முத்தீ' பொலியும்; வளர்கின்ற மூங்கிற் கழைகள். முத்து ஈயும்; மாதர் அங்கங்கள் பயில்கின்ற பொய்கைகளில் மாதரங்கமாகிய பேரலை எழும்; வானில் தோன்றும் மின்னலையும் கொடிது இகழும் பொற்கொடிகள் திகழும்; நீரையும் கடந்து மருதம் மணக்கும் (வாசிக்கும்): பூங்காக்களில் கிளிகள் நூலகளை வாசிக்கும்; யானைகளின் இனங்கள் மேகக் கூட்டத்தைக் கலக்கும் (கனம் மடுக்கும்) அழகிய கோபுரங்களோ வானையும் தொட்டு நிற்கும் (ககனம் அடுக்கும்) என்று இருபொருள் தருமாறு பாடி இறைவியை அம்மானை ஆட அன்போடு வேண்டுகின்றார்.

வாழ்வே வருக வருகவே:

அழகுக்கு அழகு சேர்க்கும் வடிவம்மையின் பொன்னுடலில் மணிப்பொற்கலையையும் காதுகளில் இளஞ்சூரியர் போலத் திகழும் குழைகளையும், திருவடிகளுக்குச் சதங்கைகளையும் அணிவித்து அகமகிழும் அழகிய சொக்கநாதரின் கொள்கை ஆசைக்கு ஒரு சான்று காண்போம். அம்மையின் திருநுதலில் அரும்பிய வேர்வைத் துளிகளை அகற்றிவிட வருக என்கிறார்; மணற் சிற்றில் இழைத்து அட்டவுணவைத் தருதற்கு வருக என்றும், உடலில் படிந்துள்ள தூசினைத் துடைத்திட வருக என்றும், நீரில் குளிப்பாட்டிட வருக என்றும், நெடுங் கண்களுக்கு மையிட்டு மகிழ்ந்திட வருக என்றும், விலை மதிக்க முடியாத பொன் அணிகளைப் பூட்டிட வருக என்றும், விலை மதிக்க முடியாத பொன் அணிகளைப் பூட்டிட வருக என்றும் என் மடிமீது இருந்து அமுதம் பருக வருக வருக என்றும் கெஞ்சிக் கூத்தாடி அழைத்துப் பார்த்தார்; அம்மை வரவிலலை! இறுதியில்,

"மலையத் தமிழ்கேட் டுளமகிழும்
வாழ்வே வருக வருகவே" (52)

என்று வியந்தும் நயந்தும் கூறிக் கூவி அழைக்கின்றார் புலவர்.

முத்தொழிற் கடவுளாக்கும், மூப்பத்து மூக்கோடித் தேவர்கட்கும், முதிர்சுவைக் கலைமகளுக்கும், சீகாழி வரதனுக்கும் திருக்கடவூர் அபிராமிப் பட்டருக்கும் ஏனைப் பாவலர்க்கும் அருட் பார்வை பொழிந்த அன்னை வடிவை நோக்கி,

"கழறரிய பேரருட் கடல்மடை
திறந்தபடி கடையேற்கும் உதவு" (56) என்று பணிந்து வேண்டுகின்றார் பிள்ளைத் தமிழ்ப் பெரும்புலவர்.

அம்மை அழைக்கும் அழகு நிலா!

'பிள்ளைத் தமிழுக்கு அம்புலி புலி' என்பது ஆன்றோர் மொழி திங்களைக் குழந்தையுடன் வந்து விளையாடுமாறு பாடுவதாகும். இன்சொற் கூறியும், வேறுபாடுரைத்தும், ஊதியம் கூறியும், அச்சுறுத்தியும் அதாவது திங்களைச் சாம, பேத, தான, தண்டமாகிய நால்வகை உபாயங்கள் கூறி அழைத்துப் பாடும் மரபினைத் தவறாது பின்பற்றியுள்ளார். அம்மை, தன் அழகிய பிஞ்சுக் கைகளால் நிலவைத் தன்னோடு ஆடவருமாறு அழைத்தாள், ஆனால் வெண்திங்களோ விண் திங்கள் என்று எண்ணி ஓடியது. அப்போது அழகிய சொக்க நாதர் தன்னைத் தாயாகவே பாவித்துப் பாடும் திறம் வியந்து பாராட்டுமாறு உள்ளது. "அம்மை மகிழுமாறு இவளோடு நீ இதுவரை ஆட வரவில்லை. இவள் உள்ளம் வெருளுமுன் ஆட வா! இல்லை என்றால் இவளுடைய இனிய மூத்த மைந்தன் யானைமுகன், உலவுகின்ற உன்னை ஒரு கவளம் என்று உண்டால் நீ என் செய்வாய்? மிகுபுகழ் கொண்ட இளைய மைந்தன் அறுமுகச் செவ்வேள் வேலைத் தொட்டு விட்டால் எங்கே சென்று உய்வாய் நீ?" என்றும் பாடுவார். காந்தி மதிக்கும் திங்களுக்கும் 'மதி' என்று பேர். பால் நிலவைப் பார்த்துப் படித்துப் படித்துச் சொல்கின்றார்; ஆனால் மதியில்லா மதி வரவில்லை எனவே வெறுப்புடன் வெஞ்சொல்லாக வெளி வருகின்றது பாடல்:

"படித்துப் படித்துப் புகன்றும்
எண்ணிப் பாராய்ஒரு சற்றேனும்; மதி
படையா உனக்கு மதிஎனும் பேர்
பகர்ந்த தெவரோ? பலநாளும்
அடித்துப் பாலும் புகட்டுவரோ?"

என்கின்றார்.

திங்களைப் பல கோள்கள் சூழ்ந்துள்ளன! ஆனால் அம்மையின் முன் மட்டுமல்ல — அவள் திருவடிப் புகழ்பாடிப் பரவும் அடியவர் முன்னும் கூடக்கோள் அணுகாது. எனவே 'அறம் வளர்த்த கையால் அசைப்பதனை அறிந்து அருகில் வருக! என்று (68) அழைக்கின்றார்.

உவக்கும் உருவகங்கள் :

உருவகமும், உவமை நலமும், கற்பனை வளமும். சொன்ன யமும் இன்னபிற சிறப்புக்களும் இந்நூலில் அமைந்துள்ளன. செடியாய வல்வினைகளைத் தீர்த்து உலகுக்குப் படியளக்கும் வடிவுடையம்மையின் திருக்கைம்மலர்களைப் புகழும்போது, அத் திருக்கைகள் அசுரரை அழித்துத் தெய்வமகளிரின் திருமங்கல நாணைக் காத்த ஆனைமுகன் ஆறுமுகன் ஆகிய இருபிள்ளைகளை ஏந்தியணைத்துத் தூங்கவைக்கும் தொட்டிலாகவும், சிவபெரு மானுடைய திருக்கண்களைப் புதைத்து இரு சுடர்களை அடைத்து வைத்த சிறைச்சாலையாகவும், அடியவர்க்கு அருள் சுரக்கும் அபயவரதமாகவும், செழுங் கமல மலர் நிதியமாகவும், பைங் கிளிகள் பயிலும் குடம்பையாகவும் தோன்றுவதாக (33) உவக் கும் வகையில் உருவகப்படுத்தி யுரைப்பார்.

ஐங்கரத்து அண்ணனுக்கும் அறுமுகச் செவ்வேளுக்கும் இடையில் ஓரு உரையாடல் நிகழ்வதாகக் காட்டும் கற்பனை கருத்தினிக்க அமைந்துள்ளது. ஆனைமுகன், தன் தம்பியிடம் "உனக்கு மட்டும் கவின்தோய் முகம் ஆறு காணுமாறு என்ன?" என்று கேட்க, அதற்கு முருகவேள்,

> "நம்மை ஈன்றவர் உவகை
> கொழிப்ப ஓருமித்து எனைமுத்தங்
> கொண்டு விளையா டுதற்கு" (54)

என்று கூறியவுடன் அம்மைக்கே அளவிலா மகிழ்ச்சி ஏற்பட்டதாம்

அம்மையிடத்துள்ள பரிவும் பாசமும் :

வருகைப் பருவத்தில் ஒரு பாடல், அழகிய சொக்கநாதர் காந்திமதிவல்லியைக் கனிவோடு அழைக்கின்றார். 'அம்மை நீ வாராதிருந்தால் உன் விழிக்கு மையழுத மாட்டேன். நெற்றிக் குத் திலகம் இடேன். பொன் அணிகளைப் பூட்டேன், பெரு விருப்புக்கொண்டு பேசேன், பாலூட்டேன், தேர் செல்லும் திருவீதியின் வளத்தைக் காட்டமாட்டேன், எனவெல்லாம் அடுக்கிச் சொல்லும் பாடலில் தாயிடத்துக் கொண்ட பரிவினை யும் பாசத்தினையும் ஒருங்கே பார்க்க முடிகின்றது.

‘ வாரா திருந்தால் இனிநான் உன்
வடிவேல் விழிக்கு மை எழுதேன்
மதிவாள் நுதற்குத் திலகம் இடேன்
மணியால் இழைத்த பணிபுனையேன்

பேரா தரத்தி னெடு பழக்கம்
பேசேன் சிறிதும் முகம் பாரேன்
பிறங்கு முலைப்பால் இனி தூட்டேன்
பிரியமுடன்ஒக் கலையில் வைத்துத்

தேரார் வீதி வளங்காட் டேன்
செய்ய கனிவாய் முத்தம் இடேன்
திகழும் மணித்தொட்டி லில்ஏற்றித்
திருக்கண் வளரச் சீராட்டேன்

தாரார் இமவான் தடமார்பில்
தவழுங் குழந்தாய் வருகவே !
சாலிப் பதிவாழ் காந்திமதித்
தாயே வருக வருகவே ! ”

என்று அழைக்கும் கனிவில் இறையியுடன் ஏற்பட்ட உறவு மேலும் வலுக்கின்றதன்றே !

“ கரும்புதின்னக் கூலியுண்டோ ? ” “ மயிலே மயிலே என்ரூல் இறகு போடாது ” என்றும் நம்மிடையே வழங்கும் வழக்குத் தொடர்களைக் கையாண்டு பிள்ளைத் தமிழைச் சுவைத் தமிழாக்கியுள்ளார். ‘ பெரிய தமிழ் ‘ என்று பெயரிட்டு அழைக் கும் வண்ணம் சொற்சுவையும், பொருட்சுவையும், பழந்தமிழ்ச் சொல்லாட்சியும், பன்னூற் புலமையும், சந்த நடையும் செந் தமிழ் மணமும், கற்பனையும், கவின்மிகு காட்சிகளும் அணி யும், அழகு தமிழ்ச் சொல்லோவியமும். இறை நலமும், இளமை யின் வளமும் இணைந்தோடப் பாடியுள்ள காந்திமதியம்மை பிள்ளைத் தமிழைக் கற்று அழகிய சொக்கநாதரின் அருந் தமிழ்ப் புலமையின் விருந்தினை உண்டு உய்தி பெறுவோம் !

தமிழிலக்கியங்களில் வடமொழி இராமாயண கருத்துக்கள்

ஏ. ஏகாம்பரநாதன்,
தொல்லியல்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

வடமொழி காவியமாகிய வால்மீகி இராமாயணத்தில் காணப்படும் செய்திகள் பல சங்க இலக்கியங்களிலும், இரட்டைக் காப்பியங்களிலும் இடம் பெற்றுள்ளன. தமிழகத்தில் கம்ப இராமாயணம் தோன்றுவதற்கு முன்னரே வால்மீகி இராமாயணக் கருத்துக்கள் நன்கு பரவியுள்ளன. இது வடமொழியாளரும், தமிழரும் அக்காலத்தில் கொண்டிருந்த தொடர்பின் விளைவேயாகும். இப்பகுதியில் சங்க இலக்கியங்களிலும், இரட்டைக் காப்பியங்களிலும் இடம் பெற்றுள்ள இராமாயணச் செய்திகளை மட்டிலும் காண்போம்.

அருந்திறல் பிரிந்த அயோத்தி :

சிலப்பதிகார நாயகனாகிய கோவலன், தான் இழந்த பொருளினை ஈட்டும்பொருட்டு, கண்ணகியோடு மதுரை நகருக்குச் சென்றான். கோவலனது பிரிவினைப் பொறாத பூம்புகார் நகரப் பெருமக்கள், தசரத மன்னன் இட்ட கட்டளையை நிறைவேற்ற அருங்காட்டினை அடைந்த அருந்திறல் இராமனைப் பிரிந்த அயோத்தி நகர மக்களைப் போலப் பெரும் பேதுற்றனர் என்பதை,

> "பெருமகன் ஏவ லல்ல தியாங்கணும்
> அரசே தஞ்சமென் றருங்கான் அடைந்த
> அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
> பெரும்பெயர் மூதூர் பெருமபே துற்றதும்".

என்னும் பகுதியால் அறிய வருகிறோம். (சிலம்பு : 12; 63—66)

மேலும் கோவலன் தனக்குற்ற துன்பத்தினை எண்ணி வருந்திய காலை கவுந்தியடிகள், 'இராமபிரானே தந்தையின் ஏவலின்படி, தனது துணையாகிய சீதையுடன் காட்டிற்குச் சென்று பின்னர் அவளையும் இழந்து வருந்தினன் எனவும், துன்பங்கள் அனைத்தும் வினைப்பயனால் ஏற்படுபவையாதலின் அதற்காக வருந்துவதில் பயனில்லை, எனவும் ஆறுதல் மொழி கூறுகிறார்.

(சிலம்பு — 14. 45—48)

மதரணிகண்ட குரக்கினம் :

சோழமன்னன் இளஞ்சேட் சென்னியிடம் ஏராளமான பரிசுகளைப் பெற்ற புலவர் ஒருவர் அப்பரிசிற் பொருட்களைத் தன் உற்றார், உறவினர்களுக்குக் கொடுத்து அவர் தம் வறுமை நோய் களைந்தார். பரிசுப் பொருட்களைப் பெற்ற மகிழ்ச்சியினால் அவர்கள் விரலில் அணியும் அணிகளைக் காதிலும், காதில் அணி வனவற்றை விரலிலும் மாறிமாறி அணிந்தனர், இச் செய்கை யானது இலங்கை அரக்கன் சீதையைக் கவர்ந்து சென்ற காலை, அவள் கழற்றி எறிந்த அணிகலன்களைக் கண்டெடுத்த குரங் கினங்கள் அவற்றை அணிந்து மகிழ்ந்தது போன்றிருந்தது எனப் புலவர் புறநானூற்றில் குறிப்பிட்டுள்ளார்.

(புறம் ; 378 : 18—21)

முந்நீர் அடைத்தல் :

காய சண்டிகை என்பாள் யானைத்தீ என்னும் கொடிய பசியால் மிகவும் துயருற்றாள் அவளது தீராத பசியானது, இராமபிரான் இலங்கையை அடைதற்குக் முக்கடல்களையும் தடுத்து அணைபோட விரும்பியபோது, குரங்கினங்கள் கொணர்ந்து வந்த மலைகளை எல்லாம் தன்னகத்தே அடக்கிய கடலினைப் போன்றது ஆகும் என சாத்தனார் கட்டுரைக்கின்றார். (மணி. 17. 9—12) குரங்கினங்கள் ஏராளமான மலைகளைக் கொணர்ந்தெறிந்த பின்னரும் கடலில் எளிதில் அணைபோட முடியாமற்போனது போன்று, அதிக உணவு உண்ட பின்னரும் காய சண்டிகையின் கடும்பசி நோய் அடங்கியபாடில்லை என்பது பொருளாகும்

தொல்லிலங்கை அழித்தமை :

ஆயர்குல மடந்தையர் தம் நிலத்திற்குரிய கடவுளாகிய நெடுமாலை வாழ்த்தி வணங்குங்கால், அவரது அவதாரமாகிய இராமன் தன் தம்பியோடு கானகம் புகுந்து, பின்னர் இலங்கையை அழித்த வெற்றிச் சிறப்பினையும் பாடி மகிழ்கின்றனர் இதனை,

" ..... தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியோ "

என்பதால் (சிலம்பு, 17 ; 1 ; 2—4) நன்கு அறிகிறோம்.

அருமறை ஆய்ந்த இராமன் :

பாண்டிய நாட்டுக் கடலின் முன்துறையானது ஒலியின்றி அமைதியாக இருந்த காட்சி.

"வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல" (அகம். 70 : 15—16)

இருந்ததெனப் புலவர் பகருகின்றார். போரில் வெற்றியையுடைய இராமபிரான் அருமறையின் பொருளை ஆய்வதன்பொருட்டு, பறவைகளின் ஒலியில்லாமல் செய்து ஆலமரத்தின் கீழ் அமர்ந்த செய்தி இப்பகுதியில் கூறப்பட்டுள்ளது.

மீட்சி அளவை :

மணிமேகலை சமயக் கணக்கர்களிடம் அவர்களது சமய நுண்பொருள்களைக் கேட்டறிகிறாள். அப்போது மீட்சி அளவை பற்றி சமயக் கணக்கர் ஒருவர்,

"மீட்சி யென்ப திராமன் வென்றனென
மாட்சியில் இராவணன் தோற்றமை மதித்தல்"

எனக் கூறுகிறார். (மணி. 27 ; 53—54). அதாவது இராமன் வெற்றி பெற்றான் என்பதிலிருந்து இராவணன் தோல்வியடைந்ததையும் உணர முடிகிறதென்பதாகும் இராமாயணத்தில் மீட்சி அளவை பற்றிக் கூறப்படவில்லையாயினும். இராமனது வெற்றியும், இலங்கை மன்னனது தோல்வியும் அடிப்படைக் கருத்துக்களாகும்.

இலங்கையரசன் இமயம் — பெயர்க்க முயன்றமை :

ஐயிரு தலையுடைய அரக்கர் கோமானாகிய இராவணன் தன் உடல் வலிமையாலும், தனக்கொப்பார் எவருமில்லை என்ற ஆணவத்தாலும் இறைவனும், உமையவளும் ஒருங்குடன் கூடி மகிழ்ந்திருந்த இமய வெற்பினைத் தன் பதிற்றிரு கரங்களால் பற்றி எடுக்க முயன்றபோது, செஞ்சடையண்ணல் தன் கால் பெருவிரலால் கயிலைமலையைக் கீழுற அழுத்தினான். இதனால் வலி குன்றிய இராவணன் கயிலையை அசைக்க முடியாது உழன்றனன். இச் செய்தி சங்க இலக்கியங்களுள் கலித்தொகையில் மட்டிலும் (கலி 38 : 1—5) காணக்கிடக்கின்றது.

அகலிகையும், ஆயிரங்கண்ணுனும் :

காவியத் தலைவியாகிய மணிமேகலை மீது காதலுற்ற உதய குமரனிடம், துன்பமுற்றாயினும் மணிமேகலையை அடைந்து மகிழுமாறு சித்திராபதி என்பவள் கூறுகிறாள். அவ்வாறு கூறுங் கால், மாதவ முனிவன் கவுதமனது மனைவியின்மீது காதலுற்ற இந்திரன் பல துன்பங்களை அனுபவித்த பின்னரே அவளை அடைந்தான் எனக் குறிப்பிடுகிறாள் (மணி. 18: 90—91); இந்திரனைப் போன்று உதயகுமரனும் துன்பத்தினைப் பொருட் படுத்தாது. மணிமேகலையை அடைய வேண்டும் என்பது சித் திராபதியின் கருத்தாகும். ஆயிரங்கண்ணுன், கவுதம முனி வனது மனைவியாகிய அகலிகையின் மீது காதலுற்ற செய்தி பரிபாடலிலும் கூறப்பட்டுள்ளது. (பரி. 19: 46—53)

இராமாயண ஓவியங்கள் :

சங்க காலத்தில் இராமாயணத்தில் கூறப்பட்டுள்ள சில செய்திகள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டிருக்கின்றன ஆலவாயை அடுத்த திருப்பரங்குன்றத்திலுள்ள முருகப் பெருமான் கோயி லின் மண்டபத்தில் அவ்வோவியங்கள் இடம்பெற்றதை,

> "இந்திரன் பூசை இவளக லிகையிவள்
> சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
> ஒன்றிய படியிதென் றுரைசெய் வோரும்
> இன்ன பலபல எழுத்து நிலை மண்டபம்"

எனும் பரிபாடல் பகுதியால் அறியக்கிடக்கிறோம். (பரி 19: 46—53). அதாவது; 'கவுதம முனிவனது மனைவியாகிய அக லிகையின் மீது காதலுற்றுப் பூசை வடிவெடுத்த இந்திரனது ஓவியமும். அகலிகையின் ஓவியமும். கவுதமனது ஓவியமும், அவனது சினத்தால் அகலிகை கல்லுருவாகிய ஓவியமும், இன்னபல ஓவியங்கள் நிறைந்தது திருப்பரங்குன்றக் கோயில் மண்டபம்' என்பது பொருளாகும். வால்மீகி இராமாயணத்தில் இந்திரன் கவுதம முனிவனைப் போன்ற வேடத்துடன் சென்று மகிழ்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது. (பாலகாண். அத் 48) ஆனால் பரிபாடலில் விண்ணவர் தலைவன் பூசை வடிவத்துடன் சென்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராம அவதாரம் :

சங்க நூற்களில் இராமயணக் கருத்துக்கள் இடம் பெற் றிருப்பினும், இவற்றில் இராமனைத் திருமாலின் அவதாரமாகக் குறிப்பிடவில்லை. ஆனால் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய

இரு நூற்களிலும் இராமன் திருமாலின் அவதாரமாகக் கருதப் பட்டுள்ளான். இளங்கோவடிகள்,

> "தாதை ஏவலின் மாதுடன் போகிக்
> காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
> வேத முதல்வற் பயந்தோன்....."

எனக் கூறுகின்றார் (சிலம். 14: 45—48). அதாவது, 'வேத முதல்வனுகிய பிரம்மனைப் பெற்ற திருமால், தசரதன் ஏவலின் படி காட்டிற்குத் தன் துணையுடன் சென்று, பின்னர் அவளை யும் இழந்து துன்புற்றனன்', என்பது பொருளாகும். இங்கு இராமனைத் திருமால் எனக் கூறியிருப்பது குறிப்பிடத் தக்க தாகும். இதுபோன்று ஆய்ச்சியர் குரவையிலும் (சிலம் 17 படற்கை பரவல் 1—5) மூவுலகும் ஈரடியால் அளந்த நீல மேனி நெடியோன் இராமனைத் தோன்றி இலங்கையை அழித்த செய்தி காணப்படுகிறது.

மணிமேகலையில்,

> "நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
> அடலரும் முந்நீர் அடைத்த ஞான்று".—

என வருவதை (மணி. 17: 9—10) நோக்குங்கால் திருமால் இந் நிலவுலகில் இராமனைத் தோன்றி இலங்கையை அடையக் கடலை அணைபோட்டனன் என்பது தெள்ளிதின் விளங்கும். எனவே இலக்கியங்களை அடிப்படையாகக்கொண்டு நோக்கும் போது தமிழகத்தில் இராமன் சிலப்பதிகார — மணிமேகலை காலத்தில்தான் திருமாலின் அவதாரமாகக் கருதப்பட்டிருக்கிறான் என்பது அறியற்பாலதாகும். (Dr R. Champakalakshmi, "Some Vaishnava concepts in Early Tamilnadu". **J of India History.** 1972 p. 728)

இதுகாறும் கூறியவற்றால் சங்க காலத்திலேயே வடமொழி இராமாயணக் கருத்துக்கள் தமிழகத்தில் பரவியிருந்தமையை யும். இரட்டைக் காப்பிய காலத்தில் இராமன் அவதார புருட னாக ஏற்றுக் கொள்ளப்பட்டமையையும் அறிய வருகிறோம். மேலும் பரிபாடலில் கூறப்பட்டுள்ள திருப்பரங்குன்ற ஓவியங் களே தமிழகத்தில் முதல் இராமாயண ஓவியங்களாகத் திகழ்ந் திருக்க வேண்டும் என்பதிலும் ஐயமில்லை. தற்போது பரி பாடல் செய்தியைத் தவிர அவ்வோவியங்கள் எஞ்சி நிற்கவில்லை.

போர்ப் பத்து

முதுபெரும் புலவர், ந. மு. கோவிந்தராய நாட்டார்,
பி ஏ., எல். டி., அவர்கள்

1. போரிடுவோம் மாந்தர்காள் போரிடுவோம் மாந்தர்காள்
வாரீர் குவலய மக்களுடன் — போரிடுவோம்
எத்துணை வீரர் இறப்பினும் இன்பமே
அத்துணை ஊனைச்ச மாம்.

2. போர்வேண்டாம் என்பரே புல்லறிவாளர்கள்
போரில்லை யாஞல் புவிதனில் — சோறிலையாம்
யாரெதிர் நிற்பினும் யாமெதிர்த்துச் சாய்த்திடுவோம்
பாரினில் பஞ்சந் தீர.

3. பாரினில் பஞ்சம் பறந்தோடப் பாரதப்
போரினைத் தொட்டான் புயல்வண்ணன் — தேரினில்
அர்ச்சுனற்குச் சொன்ன ததுவேயாம் ஆகலின்
சர்ச்சியா மல்வீழ் சமர்.

4. போரின்றி எக்காலம் இப்புவியில் போர்வேந்தர்
சீர்மிக வாழ்ந்தனர் தேர்ந்துரைக்கில் — போரேதான்
மன்னரின் வாகைக்கு வாய்ப்பாகும் மற்றவையால்
என்ன புகழோ இவர்க்கு

5. படையாளர் வேந்தர் படைத்திருத்தல் ஏஞை
விடைபிறுப்பீர் வேண்டாம் போர் என்பீர் — நடையறிந்து
மன்னர்க்கவற்றை வகுத்துரைத்தான் வள்ளுவன்வே
றென்ன விரிப்பேன் இயம்பு.

6. போரை ஒழிக்க விரும்பும் புவிமாந்தர்
பாரில் நடுக்குடன் பௌவக்கோள் — நேரிடின்
வல்லாரோ அன்னதை மாற்ற வழியறியார்
சொல்லார் விடையிதற்குச் சோர்ந்து.

7 இராமன் கதையின் இருங்கூறு போராய்
இராமல் முடிந்திடில் யாரே — தராதலத்தில்
மெச்சுவர் வெற்றென நீளும்வியன் சரிதம்
நச்சுவீர் போரை நயந்து.

8. சூரரை வேர்கலைய சூழ்ச்சிவே றில்லையோ
போரில் முருகன் புகுந்ததேன் — பாரினில்
எப்போதும் போர்வேண்டும் என்பதற்கே ஆகலின்
தப்பாது வீழ்வீர் சமர்.

9. காற்றும் மழையும் கடுகி முழக்கியே
கூற்றென மக்களைக் கொன்றிடுங்கால் — மாற்றுதிரோ
வீண்முயற்சி வேண்டாம் சமரை விலக்குதற்கு
காண்பீர் கடவுள் செயல்.

10. இன்றியமை யாத்தீமை போரென்று செப்பினர்முன்
நன்றிதன் உண்மையை நாட்டுதற் — கின்றியான்
பாட்டினில் பற்பல மேற்கோள் பலருணரக்
காட்டினேன் தேர்வீரே கண்டு.

பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டு தரும் வரலாறு

பேராசிரியர் சி. கோ. தெய்வநாயகம்,
எம் ஏ , பி. எசி , டிப்-இன்-அக்ரி. சர்டிபிகேட்-இன்-எபி

பல்லவராயன் பேட்டைச் சாசனம் காட்டும் உண்மைச் செய்தி யாது? என்பது குறித்து பேராசிரியர்; K. A. நீலகண்ட சாஸ்திரியார், பண்டாரத்தார், N சேதுராமன் போன்றோர் ஒன்றற்கொன்று முரணிய நிலையில் ஆய்வுரைகள் தந்துள்ள னர். இதன் உண்மைநிலை யாது? என அறிய வேண்டியே தமிழக வரலாற்றின் உண்மை வரலாறு காணும் ஆவலுடை யேன் ஆதலின் யானும் இக்கல்வெட்டினை கருத்தூன்றிக் கணிக் கலானேன். என் அறிவிற்கெட்டிய நிலையில் இக்கல் வெட்டி னைப்பற்றிய விளக்கத்தினை இவண் படைக்கின்றேன்.

பல்லவராயன் பேட்டைச் சாசனம் கி. பி. 12-ஆம் நூற் றாண்டைச் சேர்ந்ததாகும். இக்கல்வெட்டு மாயூரத்திற்கு வட கிழக்கே 4 கல் தொலைவில் உள்ள பல்லவராயன் பேட்டை எனுமூரில் உள்ள சிவக் கற்றளியில் உள்ளது; இக்கல்வெட் டின் இடையே ஒரு சில வரிகளில். சில இடங்கள் காலத்தின் வேறுபாடுகளால் சிதைவுற்று எழுத்துக்கள் தெளிவுறு நிலையில் உள்ளன. எனவே அச்சிதைவுற்ற இடத்தில் பொருந்தக்கூடிய எழுத்துக்களை இட்டு நிரப்பியே கல்வெட்டினை முழுமையாகப் படிக்க வேண்டியுளது, அந்நிலையில் உயர்திரு சதாசிவப் பண்டாரத்தாரால் தெளிவாகப் பதிப்பிக்கப் பெற்ற IER துறையினரால் படிக்கப் பெற்ற நிலையில் பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டினைக் கீழ்க் காண்க.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கடல் சூழ்ந்த பார்மாதரும் பூமாதரும் கலைமாதரும் அடல் சூழ்ந்த போர்மாதரும் சீர்மாதரும் அமர்ந்து வாழ 2 நாற்கடல்சூழ் புவியேழும் பாற்கடல்போல் புகழ் பரப்ப ஆதியுகம் ஆமென்னச் சோதிமுடி பூண்ந்தருளி 3. அறு சமய மும் ஐம்பூதமும் நெறியில் நின்று பாரிப்பத் தென்னவரும் சேர லருஞ் சிங்களரு முதலாய மன்னவர்கள் திறைசுமந்து வந்தி றைஞ்சிச் சேவிப்ப ஊழி செங்கோல் ஏழுபாரும் இனிதளிப்பச் செம்பொன்

4. வீராசிம்ஹாதனத்து உலகுடைமுக்கோக் கிழானடிக
ளோடும் வீற்றிருந்தருளிய கோவிராஜ கேசரி பன்மரான திரி
புவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜாதி ராஜ தேவர்க்கு யாண்டு
எட்டாவது 5. ஐயங்கொண்ட சோழ மண்டலத்து ஆமூர்க்
கோட்டத்துச் சிறுகுன்ற நாட்டுக் காரிகைக் குளத்தூர்க் குளத்
துளான் திருச்சிற்றம்பலமுடையான் பெருமானம்பியார் ஆன
பல்லவ 6 ராயர் பெரிய தேவர் ராஜராஜ தேவர் பத்து
கோயிற் கொத்துமானை குதிரை அகம்படி நியாய முள்ளிட்ட
துறைகளுக்கும் முதலிகளுமாய் முதலிகள் ஓபாதி காரியத்து

7. க்குங் கடவருமா யெல்லா வரிசைகளும் முன்னேவல்
உள்ளிட்டு முதலிகள் பெறக்கடவ ஏற்றங்களும் பெற்று நின்று
பெரிய தேவர் துஞ்சியருளிப் பிள்ளைகளுக்கு ஒன்றும் இரண்
டும் திருநட்சத்திரமா 8 கையால் ஆயிரத்தளிப் படைவீடும்
விட்டுப் போதவேண்டிப் போதுகிற இடத்துத் திருவந்தப்
புரமும் பரிவாரங்களும் உள்ளிட்டன எல்லாம் பரிகரித்துக்
கூட்டிக்கொடு போந்து ராஜ 9. ராஜபுரத்திலே இருந்த இடத்
துக்கு சூழ்ந்த இடன் யாறு மிகுதிப் ரத்து உடன் கூட்
டத்தா . ராலும் எல்லாக் கலக்க .. சோழராஜ்யத்துக்குளேயே
யிருப்பார் காரண வருட ...

10. வேண்டிப் புறத்து எல்லா அடைவு கேடுகளும் வரா த
இடத்து இந்நல்களும் பரிகரித்து இப் பெரிய தேவர் எழுந்
தருளிய நாளிலே திரு அபிஷேகத்துக்கு உரிய பிள்ளைகள்
இன்றியே ருக்கிற 11. படியைப் பார்த்து முன்னிலே
காரியம் இருந்தபடி விண்ணப்பஞ் செய்து கங்கை கொண்ட
சோழபுரத்திலே எழுந்தருளி யிருக்கிற பிள்ளைகளை பிரயாணம்
பண்ணுவித்து உடையார் விக்கிரம சோழ தேவர் பேரனார்
12 நெறியுடைப் பெருமாள் திருமகனார் எதிரிலிப் பெருமாளைப்
பெரிய தேவர் துஞ்சியருளின நாளிலே மண்டை கவிப்பித்துப்
போந்தாரானவாறே இவரைத் திருஅபிஷேகம் பண்ணுவிக்கக்
கடவராக நிச்செயித்து நாலாஞ் திருநக்ஷத்திரத்திலே ராஜாதி
ராஜதேவர் எ

13 ன்று திரு அபிஷேகம் பண்ணுவித்து உடன் கூட்டமும்
நாடு மொன்றுபட்டுச் செல்லும்படி பண்ணுவித்தருளினார் மிகை
செய்யாதபடியும் பரிகரித்து இவர்கள் எல்லோரையுஞ் சேரப்
பிடித்துப் பணி அழகிதா 14 கச் செய்வதொருபடியும் பண்ணி
ஈழத்தான் பாண்டி நாட்டிலே படைகளும் காரணவராளரையும்
மிகுதிப் போதவிட்டு இந்நாடு கைக்கொள்ளக் கடவனாகப் பண்
ணின இடத்துப் பாண்டியனார் குலசேகர தேவர் 15. தம்மு

டைய ராஜ்யம் விட்டு சோழ இராஜ்யத்திலே புகுந்து என் னுடைய ராஜ்யம் நான்பெறும்படி பண்ணவேணுமென்றுசொல்ல இவர் உடையார் குல்சேகர தேவர் பெறும்படி பண்ணக்கட

16. வராகவும் இந்த ராஜ்யத்திலே புகுந்து வந்து கைக் கொண்ட இலங்காபுரி தண்ட நாயகன் உள்ளிட்டாரைக் கொன்று பாண்டியர்கள் இ 17. ருப்பான மதுரை வாசலிலே இவர்கள் தலை தைப்பிக்கக் கடவராகவும் சொல்லி யிப்படி யெல் லாம் விண்ணப்பஞ் செய்து திருவுள்ளமானபடியே பாண்டியனூர் குலசேகர தேவர் சோழ ராஜ்யத்தில் இருந்த நாளிலே இவர்க்கு வே 18. ண்டுவன வெல்லாங் குறைவறச் செய்து பரிகரித்துப் பலத்தாலும் அர்த்தத்தாலும் உற்சாகத்தாலும் பாண்டிநாடு கைக்கொண்டு தான் சொன்னபடியே இலங்காபுரி தண்டநாய கன் உள்ளிட்டாரைக் கொன்று இவர்கள் தலை

19 மதுரை வாசலிலே தைப்பித்து பாண்டியனூர் குலசேகர தேவர் மதுரையிலே புகுகைக்குச் செய்ய வேண்டுவனவும் வ ஜயத்து செய்வித்து இவரை மதுரையிலே புகவிட்டுப் பாண்டிநாடு ஈழநாடாகாத 20 படி பரிகரித்துச் சோழ ராஜ்யம் சென்ற படிக்கு ஈடாகத் தொண்டை நாடும் பாண்டி நாடும் செல்லும்படியும் பண்ணி ராஜ காரியங்கொண்டு நிர்வகிக்கக் கடமை .. குத் தன் கட்டளையிட்டுக் காரியங்கொண்டு செலுத் தினபடியே தமக்கு பி 21. ன்பும் இக்கட்டளையிலே காரியஞ் செல்வதொருபடி காரியங்கொண்டு செல்வத்தால் நிற்க இவர் வியாதிபட்டு இன்றியே ஒழிந்தமையில் இவர் விருந்தங்களுக் கும் மக்களுக்கும் இவர்கள் விருந்தங்களுக்கும் மக்களுக்கும் பெண மக்களுக்கும் தாயார்க்கும் உட

22. ன் பிறந்தாளுக்கும் இவள் மக்களுக்கும் இவர்கள் வற்கத்தாருக்கும் விருதராஜ பயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டு இவர் காணியான சோழேந்திர சிங்கநல்லூரில் பழம் பெயர் தவீர்ந்து யாண்டு எட்டாவது முதல் அந்தராயம் பாட் டம் உட்பட இ 23 றையிலியாய் வேறு பிரிந்த ராஜாதிராசன் குளத்தூர் நிலம் நாற்பதிற்று வேலி இந்நிலம் அனுபவிக்கும் படிக்கு ஐயங்கொண்ட சோழ மண்டலத்து மேன்மலைப் பழைய னூர் நாட்டுப் பழையனூர் உடையான் வேதவனமுடையான் அம் 24 மையப்பனான பல்லவராயன் நிச்சயித்த படியே அனு பவிக்கும் விருந்தங்களில் சிற்றூலத்தூருடையான் மகளுக்கு நிலம மூவேலியும் ஆலிநாடுடையான மகளுக்கு நிலம் மூவேலி யும் இவள் மக்கள் வாழ்க்கைப்பட்ட பெண்கள் மூவர்க்கு

25. பேரால் நிலம் இரு வேலியாக அறுவேலியும் நெற் குன்றங்கிழார் களப்பாளராயர் மகளுக்கு நிலம் மூவேலியும் இவள் மக்களில் அழகிய தேவனுக்கு நிலம் மூவேலியும் பெண் மக்களுக்குப் பேரால் நிலம் இருவேலியாக நிலம் அறுவேலி 26 யும் அம்பர் அருவந்தை காலிங்கராயர் மகளுக்கு நிலம் மூவேலியும் மக்களில் சேந்தன் திருநட்டமாடி வீரநம்பி தேவன் குடையான் மகளுக்கும் இவள் மகளுக்கும் நிலம் இருவேலியும் ராஜராஜ தேவர் விருந்தங்களுக்கும் மக்களுக்கும் நிலம் எண் வேலியும் தாயார் வைப்பு

27. ருடையார் மகளார்க்கு நிலம் வேலியும் உடன்பிறந்த பெண்களில் வீழியூருடையானுக்கு புக்க பெண்ணுக்கும் இவள் மகளுக்கும் நிலம் இருவேலியும் ஆக நிலப் நாற்பதிற்று வேலி யும் அந்தராயம் பாட்டம் உட்பட இறையிலி 28 இட்டமைக்கு உள்வரிக்கு எழுத்திட்டார் நந்திராயர் கனகராயர் முவேந்த ராயர் ஜினத்தரையர் வீசயராயர் புரவுவரி ஸ்ரீகரண நாயகம் சிறுகுடையான் குன்றங்கிழான் கானூர் கிழவன் நரியனூருடை யான் 29 புரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்டி ஈங்கை உடை யான் ஆரூர் உடையான் தத்தை நல்லூர் உடையான் சிறு நல்லூர் உடையான் இப்படிக்கு பிரசாதஞ் செய்தருளின ஸ்ரீமுகத்துக்கு எழுத்திட்டார் சேதிராசர் வாணதிரா... வரசர் 30 ராஜராஜ வீழுப்பரையர் சிங்களராயர் நீலகங்கரையர் தீப தரையர் எழுதினன் திருமந்திர ஓலை மீனவன் மூவேந்த வேளான்

இக்கல்வெட்டு இரண்டாம் இராசாதி ராசசோழனின் எட் டாம் ஆட்சியாண்டில் வெட்டுவிக்கப்பட்டதாம் இதனை,

ஸ்வஸ்திஸ்ரீ கடல் சூழ்ந்த பார்மாதரும் வீரசிம்ஹா தனத்து உலகுடை முக்கோக்கிழானடிகளுடன் வீற்றிருந்தருளிய கோவிராசகேசரிபன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீராசாதி ராசதேவர்க்கு யாண்டு எட்டாவது (பல். கல். 1—4 வரிகள்) எனும் அக்கல்வெட்டின் முற்பகுதியாகிய மெய்க் கீர்த்தி விளக்குகிறது.

இக்கல்வெட்டினை வெட்டுவிக்கச் செய்தவன் "ஜயங் கொண்ட சோழ மண்டலத்து மேன்மலைப் பழையனூர், நாட்டுப் பழையனூர் வேதவனமுடையான் அம்மையப்பனூரான பல்லவ ராயன்" ஆவான் (வரிகள் 23—24) எனும் பகுதி விளக்கும். இவனே இக்கல்வெட்டில் அமைந்த கருத்துக்களை நிச்சயித்த வன் ஆவான் (வரி 24)

யார் பொருட்டு இக்கல்வெட்டு எழுந்தது? எனும் வினாவிற்கு 5 ஆவது வரி. ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஆமூர்க் கோட்டத்துச் சிறுகுன்ற நாட்டுக் காரிகைக் குளத்தூர்க் குளத்துளான் திருச்சிற்றம்பலமுடையான் பெருமானம்பியார் ஆன பல்லவராயர் "என்பார் ஆவார்" என பதிலிறுக்கின்றது. இப்பல்லவராயர் "ராஜ காரியம் மேற்கொண்டு" (வரி 20) அருஞ் செயல்களாற்றியவராவர்.

ராஜகாரியங்கொண்டு பணியாற்றும்போதே எதிர்பாராநிலையில் வியாதிபட்டின்றியே ஒழிந்தமையின் (வரி 21) இவர் குடும்பத்தாரையும், வற்கத் தாரையும் புரப்பான் வேண்டி "இறையிலி" (வரி 23) நிலங்கள் தந்து, இறந்த பல்லவராயரின் தொண்டினை அக்காலச் சோணாட்டரசு சிறப்பித்தமையினையே இக்கல்வெட்டு உணர்த்துகின்றது.

பெருமானம்பிப் பல்லவராயரின் ராஜகாரியச் சிறப்பினைச் சிறப்பித்து அவரொழிந்த பின் அவர் குடும்பத்தினைப் புரப்பதற்கு, அம்மையப்பனரான பல்லவராயர் நிச்சயித்தார். பல்லவராயர் குலம் எனும் முறையில் அவர் சிறப்பித்தாரில்லை. பெருமானம்பிப் பல்லவராயரின் அரும்பெரும் அரசியல் தொண்டினை முன்னிட்டே அவரவ்வாறு நிச்சயிக்க, அதனை அற்றை நாள் சோழ நாட்டரசியலதிகாரிகளாய, நந்திராயர், கனகராயர், மூவேந்தராயர், ஜினத்தரையர், விசயராயர், புரவுவரி ஸ்ரீகரண நாயகர் சிறுகுடையான் குன்றங் கிழான். கானூற் கிழவன், நரியனூருடையான். புரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்டி, ஈங்கை உடையான், ஆரூர் உடையான், தத்தை நல்லூர் உடையான், சிறு நல்லூர் உடையான் (வரிகள் 28—29) போன்றோர் ஒப்பி, இறையிலி இட்டமைக்கு உள்வரிக்கு (விலக்களிக்க ஒப்பி) எழுத்திட்டார்கள் (வரி 28)

இவ்விறையிலி அனுமதியினை திருமுகமாக எழுதியவன் "திருமந்திர ஓலை மீனவன் மூவேந்த வேளான்" (வரி 30) ஆவான் இதனை திருமுகமாகக் கண்டு அவ்வாணையினை ஏற்றுக் கையொப்பமிட்டவர்கள் பெருமதிகாரிகளான சேதிராசர், வாணதிராச வரசர், ராஜராஜ விழுப்பரையர், சிங்களராயர், நீலகங்கரையர், தீபதரையர் போன்றோர் ஆவார்.

இவ்வாணையினால் பயன் பெற்றவர்கள், ராசகாரியம் செய்து பட்டொழிந்த பெருமானம்பிப் பல்லவராயரின் விருந்தங்கள், மக்கள், அம்மக்களின் உடன் பிறந்தாளின் மக்கள். இவர்களின் மக்களும் அவர்தம் வற்கமும் ஆவார்கள். (வரிகள் 21—22)

எனவே இப்பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டு "பல்லவ ராயர்" குடும்பத்திற்கான இறையிலி நிலங்களைப் பற்றிய ஆணையதாதலின், அவ்வாணை உடைய ஊர் பல்லவராயன் பேட்டை என வழங்கலாயிற்று.

இவ்வாணையினால், "வேறு பிரிந்த ராஜாதிராசன் குளத் தூர் நிலம் நாற்பதிற்று வேலியும்" இறையிலியாக மேற் குறிப்பிடப்பட்ட பெருமானம்பிப் பல்லவராயர் குடும்பத்தினர்க்கு பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (வரி — 23)

இந்நாற்பது வேலி இறையிலி நிலத்தில் விருந்தங்களில்

1.	சிற்றூலத்தூருடையான் மகளுக்கு	... 3 வேலியும்
2,	ஆலிநாடுடையான் மகளுக்கு	.. 3 வேலியும்
3.	இவளின் வாழ்க்கைப்பட்ட பெண்கள் மூவர்க்கு 2×3	... 6 வேலியும்
4.	நெற்குன்றங்கிழார் களப்பாளராயரின் மகளுக்கு	... 3 வேலியும்
5	இவளின் மக்களில் அழகிய தேவனுக்கு	... 3 வேலியும்
6	இவளின் பெண்மக்கட்கு 2×3	.. 6 வேலியும்
7.	அம்பர் அருவந்தை காலிங்கராயர் மகளுக்கு	. 3 வேலியும்
8	இவரின் மகன் சேந்தன் திருநட்டமாடி வீரநம்பி தேவன் குடையான் மகள் + இவள் மகளுக்கு	.. 2 வேலியும்
9.	ராசராச தேவரின் விருந்தங்கள் + மக்களுக்கு	.. 8 வேலியும்
10.	தாயார் வைப்பூர் உடையான் மகளுக்கு	... 1 வேலியும்
11.	உடன் பிறந்த வீழியூருடையான் புக்க பெண்டுக்கும் + இவள் மகளுக்கும்	2 வேலியும்
		40 வேலியும்

எனப் பங்கீடு செய்யப்பட்டது

இந்நிலங்களைப் பெற்றவர்களில் பெருமானம்பிப் பல்லவ ராயரின் தாயாரும் ஒருவராக இருத்தலின் பெருமானம்பிப் பல்லவராயர் நடுத்தர வயதிலேயே இறந்திருத்தல் வேண்டும் என்பது புலனாகின்றது.

— தொடரும்.

★ தமிழ்த் தொண்டு

[பேராசிரியர். ச: பாலசுந்தரம்]

இறை வணக்கம் :-

பொன்னெளிர் கயிலைநீங்கிப் பொலிதமிழ்க் கூடல்சார்ந்து
மன்னிய தமிழ்ச்சங் கத்தே மகிழ்வொடு தலைமை பூண்டு
பன்னருந் தமிழ்நூல் யாத்தும் பாவல னுயும் நூலோர்
பின்னுறச் சென்றும் தொண்டு பேணிய சிவனே போற்றி

தமிழ்த்தாய் வாழ்த்து :-

அன்புளத்தா ரென்புருக வாழ்த்தநலந் தருந்தாயே
அடியேன் சொன் மாலைபிழை பொறுத்துவரந் தருந்தாயே
தொன்மொழிபற் பலவின்று வருந்தாயே, கலைகளொடு
சொல்லமிழ்த விருந்தாயே மருந்தாயே வருந்தாயே
புன்மதியா ராய்வுரைப்பின் பொருந்தாயே, வழக்கழிக்கப்
புக்குவரும் மொழிகரந்து புறங்காட்டப் பொருந்தாயே
என்மதியுள் ளிருந்தாயே இறையுணர்வு தருந்தாயே
ஏழிசையுள் ளிருந்தாயே வணங்குகிறேன் தமிழ்த்தாயே!

கலைமகள் வாழ்த்து :-

கலைமகளே அறிவினுக்குத் தலைமகளே கருத்தினுக்குள்
நிலைமகளே நிறைமகளே அறியாமை நீங்களதிர்
கலைமகளே நாமகளே மதிப்பவர்தம் வாழ்வுயர
அலைமகளாய் அருள்மகளே அடிவணங்கிப் போற்றுவனே!

ஆசிரிய வணக்கம் :-

பாண்டியனுய்த் தமிழ்வளர்த்த பரமன், பின்னே
பாணினிக்கு முன்பெழுந்து பொதியின் கண்ணே
ஈண்டியமுத் தமிழ்முனிவன், காப்பி யன்,சீர்
ஏய்ந்தவறந் தந்தகுற ளாசான், தூய்மை

★ கரந்தைத் தமிழ்ச் சங்கச் சார்பில் 1—10—76 ஆம் நிகழ்ந்த கவியரங்கத்திற் பாடிய தலைமையுரை.

பூண்டவிளங் கோக்கம்பன் சேக்கி ழார்மெய்ப்
புலமையினுல் இறைமைநெறி பொலிவு கொள்கை
காண்டகுநூல் தந்தஅருட் பாவல் லார்தம்
கழல்போற்றிக் கைகுவித்து வணங்கு கின்றேன்.

அவையடக்கம் :-

கன்னித்தமிழைக் காதலொடு கண்போல் போற்றி உயிராக
உன்னிச்சலியா உழைப்பாலே உலகம்உய்ய வளர்த்துபுகழ்
மன்னும்சான்ரோர் ஐவரையும் மன்றத்தேத்திப் பயன்கொள்ளும்
கன்னற்கவிதை யரங்கத்தே கமழ்வீர்க்கென்றன் கைகூப்பாம்

அறிவையெனக் கருளிதமிழ் அமிழ்தம் ஊட்டி
அவையத்துள் முந்தவைத்தோங் கருந்தமிழ்நூல்
துறைவளர்க்கும் தமிழ்ச்சங்கத் தொண்ட னென்னும்
துணிவாலே சோர்வின்றித் தொண்டு பற்றி
முறையொடுதீங் கவிதைசொல முயலு கின்றேன்
மூத்தோரே இப்பாலன் பால் நேர்ந் தென்றும்
குறைகருதீர் குதலையெனக் கொண்டு தொண்டின்
கோதற்ற சீர்த்திகொள வேண்டுகின்றேன்,

தொண்டின் பொதுச் சிறப்பு :-

இருசுடரும் வீண்மீனும் பூதம் ஐந்தும்
எழிலோடு கலந்தொன்றி இயங்கு கின்ற
அரியபெருந் தொண்டாலே அகிலத் தின்கண்
அளப்பரிய பொருள் தோன்றி நிறைந்து மண்மேல்
மருவிவளர் உயிரினங்கள் இன்ப துன்ப
வாழ்வுகொளச் செய்வதனே மாட்சி மிக்க
பெரியவர்கள் உணர்ந்து தெளிந்துரைப்பார் தொண்டு
பேணுஅஃ றிணைப்பொருளிங் கில்லை யென்றே

கைம்மாறு கருதாமல் வான்வ ழங்கும்.
காற்றுமொரு நிலைநில்லா துயிர்கள் யாவும்
உய்ம்மாறு கலித்துலவும். உழுவோர்க் குள்ளம்
உலையாது குழைந்துநிலம் உணவு நல்கும்

பெய்ம்மாரி தணையேந்தி நதிகள் ஓடிப்
பெருந்தொண்டு செய்துவக்கும், தீயும் அற்றே
பொய்ம் மேவும் உயர்திணையுள் சிலரே தொண்டு
புரிந்துண்மை மக்களெனத் திகழ்கின் றார்கள்

ஓடாதநீர் உலவாத் தென்றல், வித்திற்
குதவாத மண், ஒழுகா வானம், கானம்
பாடாத குயில், பூவாக் கொடிகள் காய்த்துப்
பழுக்காத மரங், கரிய முகிலே நோக்கி
ஆடாத மயிலிவற்றை அறிவு சான்றோர்
ஆரேனும் உளமகிழ்ந்து மதித்தல் உண்டோ ?
வாடாமல், முயன்றருந்தொண் டாற்று தாரை
மாக்களொடும் ஒப்பிட்டுப் பேசார் நல்லோர்.

வாயுண்ணக் கொடுக்கின்ற கையின் தொண்டும்
வகைப்படுத்திக் காட்டுகின்ற செவியின் தொண்டும்
சேயுண்ணக் கொடுக்கின்ற தாயின் தொண்டும்
தேனெடுத்துத் தொகுக்கின்ற வண்டின் தொண்டும்
நோயெண்ணிப் போக்குமருத் துவர்தம் தொண்டும்
நூலெண்ணிப் பயிற்றுவிக்கும் ஆசான் தொண்டும்
போயெண்ணிப் பார்க்கின்வெவ் வேறு ளனும்
பொதுவாக வுலகுதுயர் நீங்கி யின்பம்.

கொண்டுவாழ் வதற்கேயாகும், கொள்கையாற் சிறந்த சான்றோர்
தொண்டுமவ் வாறே மக்கள் துயர்துடைத் தறிவு மேவி
மண்டுறு வறுமை நீங்கி வளமுற வாழ்தற் கென்பார்
தண்டமிழ்த் தொண்டு தொண்டுள் தனிச்சிறப் புடைத்
தென்பார்கள்

சாதியால் சமயப் பிரிவினால் செய்யும் சடங்கினால் மாறுபா டுற்று
மோதிநேர் உள்ளம் முரண்படும் குறைகள் முற்றுமப்
போக்குநற் றொண்டும்

ஏதிலார்க் கடிமை செய்திடு மிழிவை எதிர்த்தழித்
திரும்பெருந்தொண்டும்

நீதிபோல் பிறர்தம் உழைப்பினைச் சுரண்டும் நெஞ்சரைத்
திருத்தும்மெய்த் தொண்டும்

சோர்விலா துழைத்துப் பல்பொருள் வினைத்துத் துய்துல
கின்புறக் கொடுக்கும்

ஆர்வலர் தொண்டும் அறிவினுற் புதிய கருவிகள் பற்பல செய்து
சீர்பெற உதவும் திறலினர் தொண்டும் செப்புதற் குயர்ந்த
வென்ருலும்

பார்நிலை உயர்த்தும் மொழிவழித் தொண்டின் பாங்கினை
மற்றவை ஒவ்வா

தமிழ்த் தொண்டின் தனிச்சிறப்பு :

நெறியொடதன் காரணத்தை நிகழ்த்து வேன்,சீர்
நிலையுயர்த்தும் பயனளிக்குந் தொண்டென் ருலும்
அறிவியலால் வினைபவெலாம் புறவு டம்பின்
ஆக்கத்திற் குதவுமன்றி அழகோ டைந்து
பொறிவழிப்புக் கைம்புலனைப் பற்றி உள்ளம்
பொலிந்துவக்க உணர்வின்பம் பொலியச் செய்யா
செறிவுடைய மொழித்தொண்டோ சிந்தனைக்குத்
தேனுகி வானுர்ந்த இன்பஞ் சேர்க்கும்

வளர்சுவைமூப் பழமளிப்போர் மொழித்தொண் டாளர்
வளர்மரத்தைக் காவல்செய்வோர் நாட்டுத்தொண்டர்
கிளர்பயனை விளக்கியதைக் கிட்டச் செய்வோர்
கெழுமும் அறிவியற் ருெண்டர் மரத்தைச்சுற்றி
துளிர்விடுமுட் களைகளைவோர் சமுகத்தொண்டர்
தொகுத்துவந்து சேர்ப்பவரே உழைப்புத் தொண்டர்
தளர்வகல உண்பவர்தம் உளம்நிற் போர்யார்
தண்ணளியால் தருபவரே தாயை ஒப்பார்

மக்களுறும் இன்பதுன்ப உணர்வை ஆய்ந்தால்
மனமயக்கம் மனநிகழ்ச்சி கருத்தா லாகும்
புக்கியலும் கருத்தினது வடிவம் யாது
புகலுகின்ற மொழியன்றே, அம்மொழிக்குத்
தக்கவடி வமைப்பவரே மொழித்தொண் டாற்றும்
தகவாளர் ஆதலினல் தலைமை பெற்றார்
அக்காமா இறைவனேநாம் போற்றுதல்ஏன் ?
அறிவெல்லாம் மொழிவழியே அமைதலாலே

எண்ணுங்கால் ஒவ்வொருநாட் டகத்தும் தோன்றி
இயம்பரிய தொண்டுசெய்த வீரர் ஞானக்
கண்ணளித்த பெரியோர்நற் கலைவல் லாளர்
கருதரிய விஞ்ஞானக் கருவி கண்டோர்
தண்ணளியாற் கொடைபுரிந்தோர் உலகிற் பல்லோர்
சரித்திரத்தில் வாழ்கின்றார் மொழித்தொண்டர் நம்
எண்ணத்தில் எப்பொழுதும் வாழ்கின்றார்கள்
ஏன்? அதுதான் மொழித்தொண்டின் சிறப்பாம், ஈங்கே

புத்தர்பிரான் கன்புசியஸ் ஏசுநாதர்
புகழ்நபிகள் சங்கரர்எம் பெருமானார், வாழ்
தத்துமெய் கண்டார்மற் றிவர்கள் எல்லாம்
சமயநெறிச் சான்றோர்கள் எனினும், என்றும்
நித்தியமுற் றொளிர்பனுவல் மொழியாற் செய்து
நிலையுறுத்த காரணத்தால் அன்றே மக்கள்
சித்தமதிற் செழிப்போடு வாழ்கின்றார்கள்
செப்பரிய மொழித்தொண்டின் சீர்த்தி யென்னே!

மொழிவழித் தொண்டேயென்றும் மூத்ததென்றெண்ணி முக்கண்
முதல்வனும் குமரவேளும் முராரியும் தமிழ்ச்சங்கத்தே
கழிபெருங் காதலாலே கன்னல்முத் தமிழ்வளர்த்தார்,
கணக்கிலாப் பாண்டிவேந்தர் கழகத்தைப் புரந்தா ரேனும்

கிழியினைத் தருமிக் கீந்த மாறனும் கவிய ரங்கிற்
கேண்மையா லேறிநின்ற சிலரையுமன்றி மற்றவ்
வழியினர் எவரையேனும் மன்பதை அறியுமோ ? நல்
வாழ்வினைத் தந்தோ ரெல்லாம் வண்டமிழ் வளர்த்தோ ராவர்

எண்ணிநறுந் தமிழ்த்தொண்டு செய்தாலன்றி
இறையவர்க்கும் ஏற்றமிலை எனநினைந்து
கண்ணுதலோன் களவியலைச் செய்தளித்தான்
கண்ணபிரான் கீதையினை கழறி நின்ருன்
தண்ணளியால் தந்திமுகன் பாரதத்தை
தன்கரத்தால் வரைந்தளித்தான் நந்திதேவன்
திண்ணமுறத் திருமூல னாகி வந்து
சீர்த்ததிரு மந்திரத்தைச் செய்தான் என்ப

கலைவடிவாம் வேல்முருகன் கவிஞ னாகிக்
காழியிலே பிறந்திசைச் சம்பந்த னென்று
தலைமையுற் ருன் வாகீசர் அப்ப ராகித்
தாண்டகத் தீந்தமிழ் வழங்கித் தகவுபெற்ருர்
நிலையுடைய அருள்ஞானச் செல்வரெல்லாம்
நெறிமிகுந்த தமிழ்த் தொண்டாற் சிறந்தார் என்ப
புலையுடம்பு புகழுருவாய்ப் பொலிதல் வேண்டின்
புரிகதமிழ்த் தொண்டென்பார் புலமைச் சான்ருேர்.

— தொடரும்